செ.வெ.எண் :257/2009/செமதொஅ நாள்: 18.08.2009

**வீட்டிற்கு ஒரு மரம் வளர்த்து சுற்றுச்சூழலை பெண்கள் பாதுகாக்க வேண்டும் - தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் முனைவர் இரா.ம.இராமாத்தாள் வேண்டுகோள்.**

காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரில் "சுற்றுப்புற சூழல் பாதுகாப்பில் மகளிர் பங்கு" குறித்த கருத்தரங்கு நடைபெற்றது. இந்த கருத்தரங்கினை தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் முனைவர். இரா.ம.இராமாத்தாள் அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து விழாப் பேருரையாற்றினார்.

"பச்சையப்பன் மகளிர் கல்லூரியில் நடைபெறும் இந்த கருத்தரங்கினில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஒரு வேலையை கொடுத்தால் அதனை சிறப்பாக செய்யக் கூடியவர்கள் பெண்கள். பெண்கள் சுற்றுப்புற சூழலை பாதுகாப்பதில் பெரும் பங்காற்றி வருகிறார்கள். வீட்டிற்கு ஒரு மரம் வளர்த்தால் தூய்மையான காற்றும், மழை பெய்வதற்கான வாய்ப்பும், மண் அரிப்பும் தடுக்கப்படும்.

நமது மக்கள் விவசாய உற்பத்திக்கு இயற்கை உரங்களை விட பெரும்பாலும் இரசாயண உரங்களையே அதிகளவில் பயன்படுத்துவதனால் மண் வளம் பாதிக்கப்படுகிறது. எனவே நாம் விவசாய உற்பத்திக்கு இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி மண்ணின் வளத்தினை காப்பதோடு மட்டுமல்லாமல் குடிநீரும் மாசுபடாமல் தடுக்க முடியும். பெண்கள் நினைத்தால் எதனையும் சாதிக்க முடியும். ஆகவே உங்களது சிந்தனைகள் அறிவுப் பூர்வமாக இருக்க வேண்டும்.

தந்தை பெரியார் அவர்கள் பெண் கல்வி அவசியம் என எடுத்துரைத்தார். குடும்பத்தில் ஒரு பெண் கல்வி பெற்றால் அந்த குடும்பம் முன்னேற்றம் அடையும். அந்த குடும்பம் முன்னேற்றமடைந்தால் நாடு முன்னேற்றமடையும் என்றும், பெண்கள் எந்த ஒரு காரியத்தை செய்தாலும் அதனை பகுத்தறிவுடன் சிந்தித்து செயல்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். வீட்டிற்கு ஒரு மரம் அவசியம். உங்களது வீட்டு தோட்டத்தில் மரங்களை வளர்த்திடுங்கள். தோட்டம் இல்லாவிட்டாலும் உங்கள் வீட்டில் மண் தொட்டிகளில் பூச்செடிகளை வளர்க்கலாம். அதனுடன் சிறிது நேரம் பேசி பாருங்கள். உங்கள் மனங்களில் மகிழ்ச்சி எற்படும். அந்த அனுபவத்தினை உணர்ந்து பாருங்கள்.

நிலத்தடி நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. ஆகவே குடிநீரை தேவைக்கேற்ப சிக்கனமாக பயன்படுத்துங்கள். திருமணமான படித்த பெண்கள் வேலைக்கு செல்ல வேண்டும். 75 சதவீத பெண்கள் வரதட்சணை பிரச்சனை காரணமாகவே மகளிர் ஆணையத்திற்கு வருகிறார்கள். நாட்டில் நிலவி வரும் வரதட்சணை கொடுமை முழுமையாக ஒழித்திட பெண்கள் பாடுபட வேண்டும். சமுதாயத்தில் பெண்களுக்கு எதாவது தனிப்பட்ட முறையிலோ அல்லது வேறு ஏதாவது வகையில் பாதிப்பு ஏற்பட்டால் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தினை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். அப்படி தொடர்பு கொள்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து தரப்படும். வீட்டில் சேரும் குப்பைகளை தரம் பிரித்து அவற்றினை நமது வீட்டு தோட்டங்களில் உரங்களாக பயன்படுத்தினால் அதிகளவில் காய்கறிகளும், பழங்களும் கிடைக்கும். ஆகவே பெண்கள் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைப்பதுடன் வீடும், நாடும் சுகாதாரமாக திகழ பாடுபட வேண்டும்" என கேட்டுக் கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே. மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் தலைமையுரையாற்றுகையில், “சுற்றுப்புற சூழலை மாசுபடாமல் பாதுகாக்கின்ற பொறுப்பு பெண்களிடம் அதிகளவில் இருக்கிறது. இதனை வலியுறுத்தும் வகையில் இக்கருத்தரங்கு அதுவும் பெண்கள் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. பெண்கள் அதிகாலையில் எழுந்து அவரவர் வாசல்களை பெருக்கி, சுத்தம் செய்து தங்கள் முதல் வேலையாக தங்கள் சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்துகிறார்கள். இதனை ஆண்டாண்டு காலமாகவே தமிழ் பெண்கள் பண்பாடாகவே மதித்து கடைபிடித்து வருகிறார்கள். வேறு எந்த நாட்டிலும் இந்த பழக்கம் இருப்பதாக தெரியவில்லை. அந்த அளவில் தமிழகத்தில் தமிழ் மக்கள் சுற்றுப்புறத்தினை பேணிகாத்து வருகிறார்கள். சுற்றுப்புற சூழல் பற்றிய விழிப்புணர்வினை பெண்கள் பெற்றால் அவர்கள் சார்ந்த சமுதாயமே விழிப்புணர்வு பெறும். சமுதாயம் விழிப்புணர்வு பெற்றால் சுற்றுப்புற சூழல் கெடாமல் பாதுகாக்கப்படும். அப்படி சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டால் குளோபல் வார்மிங் என்று சொல்லப்படும் பூமி வெப்பமாதல் என்கிற பெரிய ஆபத்திலிருந்து இந்த பூமியை காப்பாற்ற முடியும். இந்த பூமியை காப்பாற்றுகின்ற தலையாய பொறுப்பு பெண்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பெண் சமுதாயத்திற்கு என் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த பொறுப்பையும் தட்டிக்கழிக்காமல் மிகுந்த கவனத்தோடு பெண்கள் தங்கள் கடமையை செய்து வருகிறார்கள் என்பதால் அரசு வழங்குகின்ற வீட்டுமனைப் பட்டாக்களையும் பெண்கள் பெயரிலேயே வழங்குகின்றோம். ஆண்கள் பெயரில் வழங்கினால் அதன் நிலைமை என்னாகும் என்பது உங்களுக்கே தெரியும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் இதுவரை 37 ஆயிரத்து 62 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்திலேயே அதிக எண்ணிக்கையில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தான் செயல்பட்டு வருகிறார்கள். மாவட்டத்தில் 21 ஆயிரத்து 491 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. அதில் உறுப்பினர்களாக 3 இலட்சத்து 42 ஆயிரத்து 770 பேர் உள்ளனர். அவர்களின் சேமிப்புத் தொகை ரூ.121.86 கோடியாகும். இதனால் மகளிரின் பொருளாதார மேம்பாடு சிறந்து விளங்குகிறது. மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் பொறுப்பும், நாணயமும் மிக்கவர்கள். அதனால் தான் வங்கிகள் போட்டிப் போட்டுக் கொண்டு கடன் வழங்குகின்றார்கள். பெண்கள் சுற்றுச்புறங்களை தூய்மை செய்து குப்பைகளை மக்கும் குப்பை, மக்கா குப்பை என தரம் பிரித்து சமூதாயத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் பயன் உள்ளவைகளாக மாற்றித் தர வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. சக்தி பெ.கமலாம்பாள், பச்சையப்பன் மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி.நா.சுப்புலெட்சுமி ஆகியோர் சிறப்புரையாற்றினார். முன்னதாக விழாவிற்கு வருகை தந்தவர்களை சென்னை பல்கலைகழக நாட்டு நலத்திட்டப் பணி ஒருங்கிணைப்பாளர் திரு.ராஜா உசேன் வரவேற்றார். முடிவில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் திருமதி.ஆலிஸ் மனோகரி நன்றி கூறினார். பெரம்பலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி. வி.வனிதா,இ.கா.ப., வழக்கறிஞர் திருமதி. சங்கமித்திரை, மகளிர் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.